**செய்தி வெளியீடு எண்: 496** **நாள்: 26.07.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 3.7.2018 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், ''மத்திய அரசு ஆண்டுதோறும் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமிய சமூகத்தினருக்கு மானியம் அளித்து வந்தது. இந்த மானியத்தை 2018–ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு நிறுத்தியுள்ளது. இந்துக்களுக்கு மானசரோவர் மற்றும் முக்திநாத் புனித யாத்திரை செல்ல வழங்கப்படும் மானியத்தைப் போலவும், சிறுபான்மை இன மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, கிறிஸ்தவர்களுக்கு ஜெருசலம் புனித யாத்திரை செல்ல வழங்கப்படும் மானியத்தைப் போலவும், இஸ்லாமிய பெருமக்கள் ஹஜ் புனிதப் பயணத்தை மேற்கொள்வதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, இந்த ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் 6 கோடி ரூபாய் மானியம் வழங்கும். இத்திட்டத்தின் கீழ், 2018–19ஆம் ஆண்டு 3,728 நபர்கள் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்வர்'' என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பை செயல்படுத்தும் வகையில், இந்த ஆண்டு (2018–19) ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியப் பெருமக்களுக்கு தமிழ்நாடு அரசு மானியம் வழங்கும் திட்டத்தினை துவக்கி வைக்கும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (26.7.2018) முகாம் அலுவலகத்தில், 7 ஹஜ் பயணிகளுக்கு தமிழ்நாடு அரசின் மானியமாக 1,11,069 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கி இத்திட்டத்தினை துவக்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 3780 ஹஜ் பயணிகள் பயன்பெறுவார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபீல், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி. சீ. வளர்மதி, தலைமைச் செயலாளர் முனைவர். கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர் / தமிழ்நாடு மாநில ஹஜ் குழு செயலாளர் மற்றும் செயல் அலுவலர் திரு.முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைச் செயலாளர் திரு. ஆ. கார்த்திக், இ.ஆ.ப., தமிழ்நாடு மாநில ஹஜ் குழு தலைவர் திரு. ஏ. அப்துல் ஜப்பார் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**